செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்
மடல்-57 செப்டம்பர் , 2026

வங்கிகளில் வாரம் ஐந்து நாள் பணி முறையை உடனே அமல்படுத்து !
வங்கி ஊழியர்களை பிளவுபடுத்தும் புதிய PLI திட்டத்தினை கைவிடு !
UFBU காலவரையற்ற நாடு தழுவிய வங்கி வேலை நிறுத்த அறைகூவல்

11-09-2026
முழு நாள்
வங்கி வேலை நிறுத்தம்

28/29/30-09-2026
மூன்று நாட்கள் தொடர்
வங்கி வேலை நிறுத்தம்

26-10-2026 முதல்
கால வரையற்ற தொடர்
வங்கி வேலை நிறுத்தம்

வாரத்திற்கு 5 நாட்கள் வங்கிப் பணி முறையை உடனடியாக அமல்படுத்த வேண்டியும், ஒன்றிய அரசின் ஒருதலைப்பட்சமான மற்றும் ஊழியர்களிடையே பாகுபாடு உருவாக்கும் PLI திட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தியும், தீர்க்கப்படாமல் நிலுவையிலுள்ள இதர கோரிக்கைகளுக்கு தொழிற்சங்கங்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண கோரியும் UFBU நாடுதழுவிய வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகளின் தொடர் வேலை நிறுத்த நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.



வாரத்திற்கு 5 நாட்கள் மட்டுமே வங்கி செயல்படும் முறையை அறிமுகப்படுத்துவது தொடர்பாக, மார்ச் 8, 2024 அன்று கையெழுத்தான 12-வது இருதரப்பு ஒப்பந்தம் (BPS) மற்றும் 9-வது கூட்டு ஒப்பந்தத்தின்படி, வாரத்தின் வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) தினமும் 40 நிமிடங்கள் கூடுதல் நேரம் பணிபுரிவதன் மூலம் வாரத்திற்கு 5 நாட்கள் வங்கிப் பணி முறை செயல்படுத்த இந்திய வங்கிகள் சங்கம் (IBA) ஒப்புக்கொண்டுள்ளது.



மேலும் இது குறித்து ஒன்றிய அரசுக்கு உரிய பரிந்துரையும் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும் இக்கோரிக்கை நிறைவேற்றப்படாது அரசின் பரிசீலனையில் நிலுவையிலேயே உள்ளது.

அதேபோல, வங்கிகளின் செயல்திறன் சார்ந்த ஊக்கத்தொகை(PLI) திட்டமானது வங்கியின் ஒட்டுமொத்தச் செயல்பாட்டின் அடிப்படையில் கணக்கிடப்படும் என்றும், அனைத்து ஊழியர்கள் மற்றும் SCALE-VII வரையிலான அதிகாரிகள் அனைவருக்கும் ஒரே மாதிரியான எண்ணிக்கையிலான நாட்களுக்கான ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் தொழிற்சங்கங்களுக்கும் IBA-வுக்கும் இடையே தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால், நிதி அமைச்சகம் (DFS) ஒருதலைப்பட்சமாக SCALE-IV மற்றும் அதற்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு வேறுபட்ட PLI திட்டத்தைச் செயல்படுத்துமாறு வங்கிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், நான்காம் நிலை மற்றும் அதற்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கு அவர்களின் தனிப்பட்ட செயல்திறனின் அடிப்படையில் 365 நாட்கள் அடிப்படைச் சம்பளம் வரை PLI வழங்கப்படும்.

அதேசமயம், துணைநிலை ஊழியர்கள், எழுத்தர்கள் மற்றும் SCALE-III வரையிலான அதிகாரிகளுக்கு அதிகபட்சமாக 15 நாட்கள் அடிப்படைச் சம்பளம்+அகவிலைப்படி மட்டுமே வழங்கப்படும்.

2026 ஜனவரி 27 அன்று UFBU நடத்திய வேலைநிறுத்தம் காரணமாக தற்போது மத்திய தொழிலாளர் ஆணையர் (CLC) முன் சமரசப் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டு இவ்விவகாரம் நிலுவையில் இருந்தபோதிலும், SCALE-IV மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையிலுள்ள அதிகாரிகளுக்கான தன்னிச்சையான PLI திட்டத்தைச் செயல்படுத்துமாறு வங்கிகளுக்கு ஒன்றிய அரசின் நிதியமைச்சகம் அறிவுறுத்தியது. டெல்லி உயர் நீதிமன்றத்திலும் இப்பிரச்சினை தொடர்பான வழக்கு விசாரணையில் உள்ளது.



தற்போதுள்ள PLI திட்டத்தில் மேம்பாடுகள் செய்வதற்கும், அரசுத் திட்டத்தில் உரிய மாற்றங்கள் செய்வதற்கும் UFBU அமைப்பின் பரிந்துரைகள் நிதி மற்றும் சேவைத் துறையின் பரிசீலனைக்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஊழியர்களுக்கு எதிரான இந்த நடவடிக்கையினை அரசாங்கம் கைவிடக்கோரி தொழிற்சங்கங்களின் கருத்துக்களையும் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தும் வகையில் **UFBU**, மத்திய தொழிலாளர் நல ஆணையருக்கு விரிவாக கடிதம் அனுப்பியுள்ளது.

அரசின் திருத்தப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்துவது வங்கிகளுக்குப் பெரும் செலவை ஏற்படுத்தும் என்பதை **DFS, CLC** மற்றும் **IBA** ஆகிய அமைப்புகளின் கவனத்திற்கு வங்கித் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு (**UFBU**) தெரிவித்துள்ளது. வங்கிகளில் உள்ள மொத்தம் சுமார் **8** லட்சம் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளில், **SCALE-IV** மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை **5** சதவீதம் மட்டுமே (சுமார் **40,000**) ஆகும்.



நியாயமான பணி மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான சமநிலை (**WORK-LIFE BALANCE**) மற்றும் மன அழுத்தமற்ற பணிச்சூழல் ஆகியவற்றை இந்நிலையிலுள்ள அதிகாரிகள் எதிர்நோக்கும் நிலையில், பாகுபாடான ஊக்கத்தொகைத் திட்டத்தினை அமல்படுத்தும் நடவடிக்கைகள் ஊழியர்களிடையே பிரிவினை உணர்வினை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு வங்கியின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு, துணைநிலை ஊழியர்கள் (**SUB-STAFF**), எழுத்தர்கள் (**CLERICAL STAFF**) மற்றும் **SCALE-VII** வரையிலான அதிகாரிகள் என அனைத்துப் பிரிவு ஊழியர்களுக்கும் ஒரே மாதிரியான ஊக்கத்தொகை வழங்க வழிசெய்யும தற்போதுள்ள **PLI** திட்டத்திற்கு மாறாக நிதியமைச்சகத்தின் புதிய **PLI** திட்டம், தனிப்பட்ட ஊழியரின் செயல்திறன், உற்பத்தித்திறன் மற்றும் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


20-8-2026 அன்று **IBA**-வுடன் நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையில், இத்திட்டத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் குறித்து மேலும் விவாதித்து, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருத்தப்பட்ட திட்டத்தினை உருவாக்குவதற்கான விருப்பத்தை **UFBU** மீண்டும் வலியுறுத்தியது.

ஆனால், **CLC**-யிடம் சமரச நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளபோதும், இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க **UFBU** முன்வைத்த பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளபோதும், **ID** சட்டத்தின் பிரிவு **33(1)** அல்லது **IR** குறியீட்டின் பிரிவு **82**-ன் கீழ் உள்ள 'தற்போதைய நிலையை மாற்றக்கூடாது' **(STATUS QUO)** என்ற சட்டத்திற்கு முரணாக, வங்கிகள் தங்கள் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளதும், **DFS** திட்டத்தின் கீழ் **PLI** (செயல்திறன் சார்ந்த ஊக்கத்தொகை) வழங்கும் நடைமுறை வங்கிகளில் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதும் கண்டனத்திற்குரியதாகும்.

ஓய்வூதியத்தை மேம்படுத்துதல் (**UPDATION**), அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் ஒரே மாதிரியான அகவிலைப்படி (**UNIFORM DA**), **NPS**-லிருந்து **OPS**-க்கு மாறுவதற்கான வாய்ப்பு மற்றும் பிற பிரச்சினைகள் இன்னும் தீர்வு காணப்படாமலே உள்ளன. இச்சூழலில், **22-08-2026** அன்று நடைபெற்ற **UFBU** கூட்டத்தில், கோரிக்கைகளை வலியுறுத்தி வலுவான போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. அதற்கான போராட்டத் திட்டங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளன.

24-08-2026 & 25-08-2026	திங்கள், செவ்வாய்	அனைத்து **UFBU** சங்கங்களின் உறுப்பினர்களை உள்ளடக்கிய பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி நம் கோரிக்கைகளை விளக்குதல்
24-08-2026 முதல் 10-09-2026 வரை		வங்கி விதிகள் /நடைமுறைகளின்படி மட்டுமே பணிபுரிதல். வழக்கமான பணிக்கு அப்பாற்பட்ட கூடுதல் ஒத்துழைப்பு அளிக்கக் கூடாது வழக்கமான வேலை நேரங்களைக் கடைப்பிடித்தல். அனைத்து வங்கி சார்ந்த **WHATS APP** குழுக்களிலிருந்தும் வெளியேறுதல்.
26-08-2026	புதன்	வேலைநிறுத்த அறிவிப்பு வெளியிடுதல்
27-08-2026	வியாழன்	நாடு முழுவதும் உள்ள அனைத்து மையங்களில் ஆர்ப்பாட்டங்கள்
28-08-2026	வெள்ளி	கருப்புப் பட்டை அணிந்து பணிபுரிதல்
30-08-2026	ஞாயிறு	**TWITTER/X** பிரச்சாரம்
01-09-2026	செவ்வாய்	டில்லியில் **UFBU** பத்திரிகையாளர் சந்திப்பு
03-09-2026	வியாழன்	அனைத்து வங்கிக் கிளைகளின் முன்பாக சுவரொட்டி பிரச்சாரம்
08-09-2026	செவ்வாய்	கோரிக்கை அட்டை அணிதல்
11-09-2026	வெள்ளி	வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகளின் அகில இந்திய முழுநாள் வங்கி வேலை நிறுத்தம்
14-09-2026 முதல் 24-09-2026 வரை		அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும் மாபெரும் தர்ணா போராட்டங்கள்
24-09-2026	வியாழன்	அனைத்து மையங்களில் வங்கி ஊழியர் ஆர்ப்பாட்டங்கள்
25-09-2026	வெள்ளி	அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும் **UFBU** பத்திரிகையாளர் சந்திப்பு
26-09-2026 & 27-09-2026	சனி, ஞாயிறு	நாடெங்கிலும் வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகள் ஒன்றிணைந்த கூட்டங்கள் மற்றும் போராட்ட ஆயத்தப் பிரச்சாரம்
28-09-2026 29-09-2026 30-09-2026	திங்கள் செவ்வாய் புதன்	வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகளின் மூன்று நாட்கள் தொடர் நாடு தழுவிய வேலைநிறுத்தம்
07-10-2026	புதன்	அனைத்து மையங்களில் வங்கி ஊழியர் ஆர்ப்பாட்டங்கள்
10-10-2026	சனி	**TWITTER/X** பிரச்சாரம்
22-10-2026	வியாழன்	அனைத்து மையங்களிலும் வங்கி ஊழியர் ஆர்ப்பாட்டங்கள்
24-10-2026 25-10-2026	சனி, ஞாயிறு	நாடு முழுவதும் உள்ள அனைத்து மையங்களில் வேலை நிறுத்த ஆயத்தக் கூட்டங்கள்
26-10-2026	திங்கள் முதல்	வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகளின் காலவரையற்ற நாடு தழுவிய வேலைநிறுத்தம்

முதற்கட்ட போராட்ட அறைகூவலின்படி, **27-08-2026** அன்று தமிழ்நாடு முழுவதிலும் எண்பதுக்கும் மேற்பட்ட மையங்களில் ஒருமித்த ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து,



28-08-2026 அன்று அனைத்து ஊழியர்களும் அதிகாரிகளும் கறுப்புப் பட்டை அணிந்து பணியாற்றினார். **30-08-2026** அன்று **TWITTER / X** ஆகிய சமூக வலைத் தளப் பிரச்சாரத்தில் அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்று நமது கோரிக்கைகளை நாடு தழுவிய அளவில் அதிகளவில் கவனம் பெற வைத்தனர்.

வங்கி ஊழியர் தற்போது அனுபவிக்கும் பணிவிதி நிலை - ஊதிய விகிதங்கள் - விடுப்புப் பலன்கள் - இடமாற்றப் பாதுகாப்புகள் - பதவி உயர்வு கொள்கைகள் - ஓய்வூதியம் போன்ற உரிமைகள் மற்றும் சலுகைகளும் அனைத்தும் எந்தவொரு அரசாங்கத்தாலும் பரிசாக அளிக்கப்படவில்லை என்பதை தோழர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.



இன்றைய வங்கி ஊழியர்கள் பணியில் சேர்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே இத்தகைய பாதுகாப்பான பணிவிதிகள் தொடர் போராட்டங்களின் விளைவாக தொழிற்சங்கங்களால் பெற்றுத் தரப்பட்டவை. இப்போது அச்சலுகைகளையும், போராடிப் பெற்ற உரிமைகளையும் தகர்த்தெறிய அரசினால் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

இன்று **PLI** ஊக்கத்தொகையை ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கும் அரசு நிர்வாகம், நாளை ஊழியர் மற்றும் அதிகாரிகளின் பதவி உயர்வு, சலுகைகள் மற்றும் ஊதியங்களையும் ஒப்பந்தகளை மீறி தீர்மானிக்க முயலும். புதிதாக வங்கிப்பணியில் சேர்ந்தோர் முதல் மூத்த ஊழியர் வரை நம் ஒவ்வொருவருவரின் எதிர்காலத்தினை உறுதி செய்யும் காப்பீடு நமது முன்னோர்கள் கட்டி எழுப்பிய தொழிற்சங்க ஒற்றுமை ஒன்றே.



ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வங்கிகளின் முன்னேற்றத்திற்காக உழைக்க விரும்பும் போது, ஒன்றிய அரசாங்கத்தின் திட்டங்கள் ஊழியர்களை பிளவுபடுத்திட முயல்கிறது.

ஊழியர்களை பிளவுபடுத்தும் இத்தீமையான **PLI** திட்டம் அமல்படுத்தப்படுவதை தடுத்து நிறுத்த வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் அணிதிரண்டு **UFBU** அறிவித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தினை ஒற்றுமையுடன் வெற்றிகரமாக செயல்படுத்துமாறு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தனது உறுப்பினர்களை கேட்டுக்கொள்கின்றது.

13வது இருதரப்பு ஒப்பந்தக் கோரிக்கைகளை பரிசீலித்து இறுதிசெய்ய அகில இந்திய வங்கி ஊழியர் சங்க துணைக் குழு ஆலோசனை கூட்டம்

தற்போதைய 12-வது இருதரப்பு ஊதிய ஒப்பந்தம் (12th BPS) 31-10-2027 அன்று முடிவடைந்து, அடுத்த ஊதிய திருத்த ஒப்பந்தம் 1-11-2027 முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. புதிய ஒப்பந்தத்தை எட்டுவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க, பேச்சுவார்த்தைகளை முன்கூட்டியே தொடங்க வேண்டும் என்று அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.



இந்நிலையில், AIBEA தனது கோரிக்கைகள் அடங்கிய வரைவு அறிக்கையை (CHARTER OF DEMANDS) கூடிய விரைவில் IBA-விடம் சமர்ப்பிக்க உள்ளது. எனவே, இணைப்புச் சங்கங்கள் மற்றும் நமது உறுப்பினர்களிடமிருந்து பெற்ற ஆலோசனைகள் மற்றும் கோரிக்கைகளை விவாதித்து இறுதி செய்வதற்காக அமைக்கப்பட்ட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் துணைக் குழுவின் கூட்டம் சென்னையில் 3 மற்றும் 4 ஆகஸ்ட், 2026 அன்று நடைபெற்றது.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் B S ராம்பாபு மற்றும் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்திருந்த இக்குழுவின் உறுப்பினர்களை வரவேற்றார். கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் இருதரப்பு ஒப்பந்தக் கோரிக்கைகள் குறித்த தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

கூட்டுறவு தத்துவங்களுக்கு எதிரான - கூட்டுறவுத்துறை ஊழியருக்கு எதிராக கூட்டுறவு வங்கிகளில் பொதுப்பணி நியமன முறையை விரிவுபடுத்த குழு அமைப்பு ! ஆட்சி மாறினாலும் கூட்டுறவுத் துறையில் காட்சிகள் மாறவில்லை

நமது மாநிலத்தில் உள்ள மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பொது மேலாளர், உதவிப் பொதுமேலாளர் உள்ளிட்ட பணியிடங்கள் பொதுப்பணி நியமன முறையின் **(COMMON CADRE)** கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் காரணமாக கூட்டுறவு வங்கிகளுக்கோ அல்லது பணியாளர்களுக்கோ இதுவரை எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. ஏற்கனவே பொதுப்பணி முறையில் உள்ள அதிகாரிகள் சிலர் பணியிலிருந்து விலகிய நிலையில், மேலும் பலர் விருப்ப ஓய்வு கோரி விண்ணப்பித்துள்ளனர்.

பொதுப்பணி நியமன முறையால் கூட்டுறவு வங்கிகளுக்கோ அல்லது பணியாளர்களுக்கோ பெரிய அளவில் பயன்கள் ஏதும் ஏற்படவில்லை என்ற நமது கருத்தை முந்தைய பதிவாளர்கள் ஏற்றுக்கொண்டு, இதனை மறுபரிசீலனை செய்யலாம் எனத் தெரிவித்திருந்தனர். ஆனால், தற்போது பொதுப்பணி முறையை அனைத்து தரப்பு ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தும் வகையில், புதிதாக மூன்று இணைப்பதிவாளர்களைக் கொண்ட குழு ஒன்றை **11.08.2026** தேதியிட்ட ஆணையின் மூலம் பதிவாளர் நியமித்திருப்பது கண்டனத்திற்குரியது.



கூட்டுறவு அமைப்பின் பலம் என்பது அதன் நிர்வாகிகளும், பணியாளர்களும், உள்ளூர் புரிதலும், உள்ளூர் தொடர்பும் கொண்டவர்களாக இருப்பதில் மட்டும் தான் உள்ளது. ஆனால், **100** ஆண்டுகால கூட்டுறவு மரபுகளைப் புறந்தள்ளிவிட்டு, பணியாளர்களை பந்தாடும் அதிகாரத்தைப் பெறுவதற்காக இதுபோன்று பொதுப்பணி முறையை விரிவுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுப்பணி முறையை விரிவுபடுத்துவதன் மூலம் பணியாளர் நியமனம் மற்றும் பணியிட மாறுதல்களில் வெளிப்படைத்தன்மை நீக்கப்படும் நிலை உருவாகும் என்பதால் கூட்டுறவு வங்கிகளில் பொதுப்பணி முறை தேவையில்லை என்பதை நமது மாநிலச் சங்கம் நமது கோரிக்கைச் சாசனத்திலும், **05.08.2026** அன்று நடைபெற்ற பணிநிலைத் திறன் நிர்ணயக் குழுவிடமும், பலமுறை பதிவாளரிடமும் வலியுறுத்தியுள்ளோம். மேலும், வருகின்ற **11.09.2026** அன்று நடைபெறும் வேலைநிறுத்தத்திலும் இக்கோரிக்கை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

பதிவாளர் அலுவலகத்தின் தற்போதைய முயற்சிகள் கூட்டுறவு வங்கிகளுக்கும், அதன் பணியாளர்களுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இம்முறையினைக் கைவிடவேண்டும் என்ற நம் கோரிக்கையினை பதிவாளர் அலுவலகம் ஏற்காத பட்சத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சென்று உரிய தீர்வுகள் கோரப்படும். இதிலும் உரிய முடிவு ஏற்படாத பட்சத்தில், தொடர் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நமது தோழர்கள் அனைவரும் தயார் நிலையில் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

வாரம் 5 நாட்கள் வங்கிப் பணி மற்றும் கூட்டுறவு வங்கி ஊழியர் கோரிக்கைகளை காலம் தாழ்த்தாமல் நிறைவேற்றிட வலியுறுத்தி

கூட்டுறவு வங்கி ஊழியர்கள் 11.09.2026 அன்று முழு நாள் வேலைநிறுத்தம்

வங்கிகளில் வாரம் 5 நாட்கள் வேலை மற்றும் நிலுவையிலுள்ள நமது கோரிக்கைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி கூட்டுறவு வங்கி ஊழியர்கள் தொடர் போராட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 08.03.2024 அன்று IBA, மற்றும் வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்புடன் (UFBU) ஏற்பட்ட ஒப்பந்தத்தில் வங்கிகளில் வாரம் 5 நாட்கள் வேலை அமல்படுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்காக தினமும் 40 நிமிடம் கூடுதல் பணி செய்ய தொழிற்சங்கங்கள் ஒப்புக்கொண்டன. ஆனால் ஒன்றிய அரசு ஐந்து நாட்கள் வங்கிப் பணித் திட்டத்தினை இதுவரை அமல்படுத்த மறுப்பது சட்டத்திற்கு புறம்பானது.

ரிசர்வ் வங்கி, நபார்டு, ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலகங்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே பணிபுரியும் நிலையில் வங்கி ஊழியர்களின் **WORK LIFE BALANCE** சமநிலையினை உறுதிப்படுத்த ஐந்து நாள் வங்கிப் பணித் திட்டத்தினை அமல் படுத்துவது மிகவும் அவசியமாகும். பெரும்பாலான வணிக வங்கிகளின் 95 சதவீத பணப்பரிமாற்றம் தற்போது **ONLINE / UPI** மூலமாகவே நடைபெறுகின்றது. எனவே வாரம் ஐந்து நாட்கள் வங்கிகள் வேலைத் திட்டம் என்பது வாடிக்கையாளர்களுக்கோ, வங்கிகளுக்கோ எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்தாது.



வங்கி ஊழியர்களின் இக்கோரிக்கையினை வலியுறுத்தி **UFBU** அமைப்பு நாடு தழுவிய போராட்ட நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளது. முதற்கட்ட போராட்டத் திட்டத்தில் நாடு முழுவதும் கூட்டுறவு வங்கி ஊழியர்களும் பங்கேற்கின்றனர். இப்போராட்டத்தில் நிலுவையிலுள்ள கூட்டுறவு வங்கி ஊழியர்களின் கீழ்க்கண்ட கோரிக்கைகளும் வலியுறுத்தப்படும்:

- கூட்டுறவு வங்கிகளிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மாதம் ரூ **10,000** கருணை ஓய்வூதியம் மற்றும் பணியிலுள்ள ஊழியர்களுக்கு மாற்று ஓய்வூதியத் திட்டம் தேவை.
- ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு ஓய்வுகால பயன்கள் முழுவதும் விடுவிக்க வேண்டும்
- கூட்டுறவு வங்கிகளில் **FIT & PROPER CRITERIA**படி தலைமை நிர்வாகிகள் நியமனம் செய்
- கூட்டுறவு வங்கிகளில் பணியாளர் நியமனம் **IBPS** மூலம் நடத்த வேண்டும்
- நகர வங்கிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பதவி உயர்வுகளை உடனே வழங்க வேண்டும்
- கூட்டுறவு வங்கிகளில் தொழில்நுட்ப சேவைகளை மேம்படுத்த வேண்டும்
- கூட்டுறவு வங்கிகளில் **CADRE STRENGTH** மாற்றியமைக்க வேண்டும்
- மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் **COMMON CADRE** முறையினை கைவிட வேண்டும்
- மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கான ஊதியக்குழு மாற்றியமைக்க வேண்டும்
- கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை உடனே துவங்க வேண்டும்
- கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு முறையான ஒழுங்கு நடவடிக்கை விதிமுறைகள் (**DISCIPLINARY PROCEEDINGS**) வகுக்க வேண்டும்
- வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் நீண்டகால கடன்கள் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

11-09-2026 அன்றைய முழுநாள் வேலை நிறுத்தத்தில் மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்து கூட்டுறவு வங்கி ஊழியர்களும் பங்கேற்று வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் இணைப்பு சங்கங்களை கேட்டுக் கொள்கின்றது.

தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மத்தியக் குழு கூட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மத்தியக் குழு கூட்டம் **20-08-2026** அன்று சென்னை **A K** நாயக் பவனில் நடைபெற்றது. தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் மத்தியக்குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றினார்.



தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் **G** வைரப்பன் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

தமிழ்நாடு நகர வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **A** சுப்பிரமணியன் அவர்கள் சம்மேளனத்தின் நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கையினை மத்தியக் குழுவின் விவாதத்திற்கு சமர்ப்பித்தார்.

மத்திய குழு கூட்டத்தில் ஊதிய உயர்வு இருதரப்பு ஒப்பந்தம் காரணமாகப் பெற்ற ஊதிய உயர்வு நிலுவை தொகையில், உறுப்பினர்கள் வழங்கிய **WAGE ARREARS LEVY** தொகை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர்களிடம் வழங்கப்பட்டது.



இக்கூட்டத்தில் மாநில சங்க நிர்வாகிகள் மற்றும் மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்து முன்னணித் தோழர்கள் பெருவாரியான அளவில் கலந்து கொண்டு விவாதங்களில் பங்கேற்று தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

மத்தியக் கூட்டுறவு வங்கி பணிநிலைத் திறன் குழுவுடன் மாநில சங்க நிர்வாகிகள் சந்திப்பு

பணியாளர் பணி நிலைமைகளை சீரமைக்க வலியுறுத்தல்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாளர் பணி நிலைத்திறனை நிர்ணயிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு **P** லோகநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.



மாநில தலைமை கூட்டுறவு வங்கி கூட்ட அரங்கில் இக்குழுவின் கூட்டம் **05-08-2026** அன்று மாலை நடைபெற்றது. குழுவின் தலைவர் திரு **P** லோகநாதன் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **G** வைரப்பன் அவர்கள் தலைமையில் மாநில சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு பதிமூன்று பக்கங்கள் அடங்கிய நமது சங்கத்தின் கோரிக்கைகளை சமர்ப்பித்து, அவை குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரகடனம் - 01-09-2026
அமைதிக்கான தொழிற்சங்கங்களின் சர்வதேச நடவடிக்கை தினம்

உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான தொழிற்சங்கங்களையும், 105 மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்களையும் உள்ளடக்கிய 'உலகத் தொழிற்சங்க சம்மேளனம்' (WFTU), இரண்டாம் உலகப் போர் தொடங்கிய இருண்ட நாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1, அன்று 'அமைதிக்கான சர்வதேசத் தொழிற்சங்க நடவடிக்கை நாள்' (INTERNATIONAL ACTION DAY OF TRADE UNIONS FOR PEACE) கடைப்பிடிக்கப்படுகிறது.

பாசிசக் கொடுமைகளுக்கு இரையான லட்சக்கணக்கான அப்பாவி மக்களையும், பெருநிறுவனங்களின் லாபத்திற்காக நடத்தப்பட்ட ஏகாதிபத்திய மோதல்களில் பலியான எண்ணற்ற மக்களையும் நினைவுகூரும் வகையில், இந்த சர்வதேச தொழிற்சங்க நடவடிக்கை நாளில் தொழிலாளர்கள் தீவிரமாகப் பங்கேற்கவும், அதற்கான போராட்ட முன்னெடுப்புகளை மேற்கொள்ளவும் WFTU தனது உறுப்பினர்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.



உலகெங்கிலுமுள்ள நாடுகளின் ராணுவச் செலவுகள் அதிகரித்து வரும் சூழலிலும், போர் சார்ந்த பொருளாதாரக் கட்டமைப்பு மக்களின் மீது திணிக்கப்படும் நிலையிலும், பாசிசம், இனவெறி மற்றும் அந்நியர் வெறுப்புணர்வு ஆகியவை தலைதூக்கும் சூழலிலும், உலகம் முழுவதிலும் உள்ள வர்க்க உணர்வுள்ள தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து போராட வேண்டியது அவசியமாகின்றது.

ஏகாதிபத்திய சக்திகளின் போர்த்திட்டங்கள் மற்றும் அனாவசியத் தலையீடுகளை தொழிலாளர்கள் கண்டிக்கின்றனர். எந்தவொரு ஏகாதிபத்திய அதிகார மையத்துடனோ அல்லது பயங்கரவாதக் கூட்டணியுடனோ தங்களை இணைத்துக்கொள்வதில் உலகெங்கிலும் வாழும் சாதாரண மக்களுக்கு எந்த ஆர்வமும் இல்லை.

NATO நாடுகளின் போர் பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் ராணுவச் செலவுகள் பெருமளவு அதிகரிப்பது மக்கள் மீது பேரழிவை ஏற்படுத்தும் வகையிலான ஒரு பரந்த ஏகாதிபத்திய மோதலின் அபாயத்தை மேலும் அதிகரிக்கின்றன. போரினால் மரணம், துயரம், அகதிகளாகும் நிலை, வறுமை மற்றும் வாழ்க்கை நிலை சீர்குலைவு ஆகியவை ஏற்படும் என்பதை உலகம் முழுவதும் உள்ள மக்கள் அறிவார்கள்.

போர் பொருளாதாரத்திற்காகத் திசைதிருப்பப்படும் பெரும் வளங்கள், மக்கள் நலம், கல்வி, சுகாதாரம், ஊதியம், ஓய்வூதியம் மற்றும் சாமானிய மக்களுக்கான சலுகைகள் ஆகியவற்றின் இழப்பிலேயே செலவிடப்படுகின்றன என்பதை உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்கள் அறிவார்கள். அனைத்து ஏகாதிபத்தியத் தலையீடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு மக்களின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் தங்கள் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தாங்களே தீர்மானிக்கும் உரிமை ஆகியவை முழுமையாகவும் நிபந்தனையின்றியும் மதிக்கப்பட வேண்டும் என்றும் **WFTU** உறுதியாக வலியுறுத்துகிறது.

சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கும் வகையில், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அவற்றின் கூட்டாளிகளால் பல நாடுகள் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், பாகுபாடு காட்டும் நடவடிக்கைகள், முற்றுகைகள் மற்றும் பொருளாதாரத் தடைகள் ஆகியவற்றை தொழிலாளர்கள் நிராகரிக்கின்றனர். நேட்டோ (**NATO**) மற்றும் அனைத்து இராணுவக் கூட்டணிகளையும் கலைக்க வேண்டும் என்றும், அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கும் ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளர் வர்க்கம் மேற்கொள்ளும் போராட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

தீவிர போர்க்களங்களுடன் தொடர்புடைய எந்தவொரு ஒத்துழைப்பு அல்லது உதவிகளையும் புறக்கணித்து தங்கள் நாடுகள் அத்தகைய போர்களில் ஈடுபடுவதை எதிர்த்து தொழிலாளர் வர்க்கம் மற்றும் அவர்களின் தொழிற்சங்கங்களின் போராட்ட முன்னெடுப்புகளை ஆதரிக்குமாறு உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளர்களை உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் - **WFTU** வேண்டுகோள் விடுக்கின்றது.

இயற்கைச் சீற்றத்தினால் நேபாளத்தில் பேரழிவு - நேபாள மக்களுடனும் தொழிலாளர்களுடனும் தோழமையுடன் துணை நிற்போம்

பனிப்பாறை வெடிப்பு காரணமாக ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் நேபாள மக்களுக்கு ஏற்பட்டுள்ள பெரும் அழிவு குறித்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மிகுந்த வேதனை தெரிவித்துள்ளது. நேபாளத்தின் பல மாவட்டங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.



நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். பொதுமக்கள், சுகாதாரப் பணியாளர்கள், இராணுவ வீரர்கள், காவல்துறையினர், அரசு ஊழியர்கள், வங்கி ஊழியர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். பொருள் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் ரூ. **2-3** டிரில்லியன்-க்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மனித உயிர் இழப்பைத் தவிர, சாலைகள், பாலங்கள், வீடுகள், தொலைத்தொடர்பு, மின் கட்டமைப்புகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய பொருளாதாரத் துறைகள் மற்றும் உட்கட்டமைப்புகள் பெரும் சேதமடைந்துள்ளன.



நேபாளம் சென்றுள்ள ஏராளமான இந்திய சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் இருப்பிடம் குறித்த தகவல்கள் கவலை அளிப்பதாக உள்ளது. நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் உள்ள வங்கி ஊழியர் சங்கத் தலைவர்களைத் தொடர்பு கொண்டு, நேபாள மக்களுக்கு கவலையையும், தோழமையையும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேபாள நாட்டின் வங்கி ஊழியர்களும் இப்பேரழிவின் காரணமாக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அவர்களின் வீடுகள் முற்றிலும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. சில வங்கி ஊழியர்கள் காணாமல் போனதால் இறந்துவிட்டதாக அஞ்சப்படுகிறது என்றும் வங்கி ஊழியர் சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிர் மற்றும் உடைமை இழப்புகளுக்கு மேலாக, போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டதால் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக உணவுப் பொருட்கள் விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த இயற்கை பேரழிவால் நேபாள மக்கள் பெரும் துன்பத்தையும் கஷ்டத்தையும் அனுபவித்து வருகின்றனர்.

அவர்களின் கடினமான இந்த நேரத்தில், நாம் நேபாள மக்கள் மற்றும் தொழிலாளர்களுடன் தோழமையுடன் துணை நிற்போம். ஆதரவு மற்றும் தோழமையின் அடையாளமாக, நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக நேபாளத்தில் உள்ள நம் சகோதர தொழிற்சங்கத்திற்கு நிதி உதவி வழங்கிட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது.



இத்தகைய இயற்கை பேரழிவுகள் பல நேரங்களில் சுற்றுச்சூழலுக்கு மனித குலத்தினால் வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் இடையூறுகளால் தான் ஏற்படுகின்றன. இது பருவநிலைகளின் சுழற்சியை மாற்றி, உலகம் முழுவதும் தீவிர வானிலை நிகழ்வுகளை உருவாக்குகிறது என்பதை புரிந்துகொள்வது முக்கியம்.

பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் முதலாளிகள் தங்கள் வணிக லாபத்திற்காக சுற்றுச்சூழலை அதனால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் அழித்துவிட்டனர். எதுவும் தற்செயலாக நடப்பதில்லை; ஒவ்வொரு வெள்ளம், நிலச்சரிவு மற்றும் வறட்சியும் பேராசை கொண்ட **MNC**-கள் மற்றும் முதலாளிகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுத்தப்பட்ட காயத்தின் விளைவாகும்.



அதிகரித்து வரும் வெப்பநிலை பனிப்பாறைகளை உருக்குகிறது. கடல் மட்டத்தை உயர்த்துகிறது, மற்றும் சாதாரண மழைப்பொழிவு கால நிலைகளை சீர்குலைக்கிறது. இதன் விளைவாக, வளரும் நாடுகள் மற்றும் ஏழை சமூகங்கள் மிகப்பெரிய சேதத்தை சந்திக்கின்றன.

தொழிற்சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள், வாகனங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து ஆகியவற்றிலிருந்து வெளியேறும் உமிழ்வுகள் காற்றை மாசுபடுத்தி புவி வெப்பமயமாதலை துரிதப்படுத்துகின்றன. காடுகள் அழிக்கப்படுவது கரியமில வாயுவை இயற்கையாக உறிஞ்சும் மரங்களை அகற்றுகிறது. பிளாஸ்டிக் உற்பத்தி நிலத்தின் வாழ்க்கைச் சுழற்சியை முழுவதும் குலைத்து மாசுபாட்டை உருவாக்குகிறது.

மாசுபட்ட காற்று கடுமையான சுவாச மற்றும் இதய நோய்களை ஏற்படுத்துகிறது. தொழிற்சாலை கழிவுகள், கழிவுநீர், இரசாயனங்கள் மற்றும் பிளாஸ்டிக் ஆகியவற்றால் ஆறுகள் மற்றும் கடல்கள் மாசுபடுகின்றன. இவற்றைத் தடுத்திட அரசாங்கங்கள் கடுமையான மாசு கட்டுப்பாடுகளை அமல்படுத்த வேண்டும். அழிவினால் ஏற்படும் செலவு சாதாரண மக்கள் மீது சுமத்தப்படாது, மாசுபாட்டிற்கு காரணமான நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டும்



நேபாளத்தில் ஏற்பட்டுள்ள பேரழிவு வெள்ளம் இயற்கையின் மற்றொரு எச்சரிக்கை ஆகும். மனிதகுலம் வளிமண்டலத்தை மாசுபடுத்தி, காடுகளை அழித்து, இயற்கை வளங்களை சுரண்டுவதை அனுமதிக்கக் கூடாது. தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் ஊழியர்களுடைய கோரிக்கைகள் மற்றும் பிரச்சினைகள் மீதான போராட்டத்தைத் தவிர, புவி வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாசுபாடு போன்ற பிரச்சினைகள் மீதான பரந்த பிரச்சாரங்களை முன்னெடுத்து, புவியினை அழிவின் விளிம்பிலிருந்து காக்க வேண்டியது அவசியம். பேரழிவினைச் சந்தித்துள்ள நமது அண்டை நாடான நேபாள மக்களின் துயரத்தில் பங்கேற்று துணை நிற்போம்.



"பருவநிலை மாற்றம் இனி எதிர்கால அச்சுறுத்தல் அல்ல
அது ஒரு நிகழ்கால மனிதாபிமான மற்றும் பொருளாதார அவசரநிலை"
-ஐக்கிய நாடுகள் சபை